**செய்தி வெளியீடு எண்: 155** **நாள்: 02.03.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 1.3.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் வேலூரில் 69 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) அலுவலகத்தை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம், நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுத்தல், தொழிற்சாலை நிறுவுவதன் பொருட்டு விதிக்கப்படும் சுற்றுச்சூழல் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு உற்பத்தியை தொடங்குவதற்கான இசைவாணை வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தலைமை அலுவலக கண்காணிப்பு, மண்டல கண்காணிப்பு, மாவட்ட கண்காணிப்பு என மூன்று அடுக்கு நிலையில் இயங்கி தொழிற்சாலைகளின் செயல்பாட்டினை கண்காணித்து வருகிறது. மொத்தம் 38 மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களில் இருபத்தி மூன்றும், ஏழு இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) அலுவலகங்களில் நான்கும் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

கடந்த 2014–15ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, வேலூர், வாணியம்பாடி, விழுப்புரம், தருமபுரி, ஓசூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களின் செயல்பாட்டினை கண்காணிக்கும் பொருட்டு, வேலூர், காந்தி நகரில் அமைந்துள்ள மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகக் கட்டடத்தின் இரண்டாம் தளத்தில் புதிதாக 536 சதுர மீட்டர் கட்டட பரப்பளவில் 69 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) அலுவலகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி. கருப்பணன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபீல், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் உறுப்பினர் செயலர் (பொறுப்பு) திரு.டி. சேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 2.3.2018**